(vii) மேட்டூர் தொகுதியில் காவிரிபுரம் கிராமத்தில் ஏற்பட்ட லாரி விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. எம். சுரேந்திரன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கிய மான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கிய மூமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் ;

"26—2—1968-ல் மேட்டூர் தொகுதி கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி காவேரிபுரம் கிராமத்தில் சி. கே. எம். விலாச முள்ள லாரி சுமார் 80 பிரயாணிகளை ஏற்றி வந்து கீழே கவிழ்ந்து இருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தும், 10 பெண்களும், 12 ஆண்களும் படுகாயமடைந்துமுள்ளனர். இவ்வாறு உயிர்களுக்கு அபாயம் உண்டாவதைத் தடுப்பதற்கும் மரணம் அடைந்தவர் களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்வது பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட விபத்து காவிரிபுரத்திற் கருகே 26—2—1968 அன்று இரவு சுமார் 10 மணியளவில் ஏற் பட்டது. தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வழங்கிய முதல் அனுமதிச் சீட்டினைப் பெற்றிருந்த MSX 9566 எண்ணுள்ள சரக்குப் பேருந்து (லாரி) பயணிகளைக் கள்ளத்தன மாக ஏற்றிச் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து காரணமாக இரண்டு பேர் விபத்து ஏற்பட்ட இடத் திலேயே இறந்தனர். இருபத்திரண்டு பேர் காயமடைந்தனர். காயமடைந்த 22 பேரில் மேட்டூர் அரசாங்க மருத்துவ மனையில் அகத்துள்ள பிணியாளர்களாக (in-patient) மூவர் சேர்க்கப் பட்டனர்; எஞ்சியவர்கள் புறத்துள்ள பிணியாளர்களாகக் (out-patient) கருதி சிகிச்சையளிக்கப்பட்டனர். எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வண்டிக்கு வழிவிடுவதற்காக, இச் சரக்குப் பேருந்து சாலையின் இடக்கோடிக்கு வந்தது. இந்தச் சாலை புதிதாகச் செப்பனிடப்பட்ட சாலையாகையால், சாலை ஓரப் பகுதி சரிந்துவிட்டதாகத் தெரிகிறது. இதன் காரணமாகச் சரக்குப் பேருந்து கவிழ்ந்தது.

1968 மார்ச் 30] [திரு. மு. கருணாநிதி]

இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு கொடுப்பதைப் பொறுத்தவரையில், இச் சரக்குப் பேருந்து அனுமதிச் சீட்டிலுள்ள நிபந்தனைக்கு முரணாகப் பயணிகளைக் கள்ளத்தனமாய் ஏற்றிச் சென்றதால் ஈட்டுறுதி நிறுவனம் (**Insurance Company**) இழப்பீடு அளிக்க முன்வரும் எனத் தோன்றவில்லை. எனவே, இதற்கு ஆகும் செலவினைச் சரக்குப் பேருந்தின் உரிமையாளரே ஏற்கவேண்டிவரும். இந்த விபத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கும், காயமடைந்தோருக்கும் இழப்பீடு கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, சரக்குப் பேருந்து உரிமையாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இறந்தவர்களின் வாரிசுகள், காயமடைந்தவர்கள் ஆகியவர்களின் பெயரும், முகவரியும் சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடமிருந்து கிடைத்தவுடன், இழப்பீடு கொடுக்கப்படுவதற்கு நடுவர் நீதி மன்றமாக அமைந்துள்ள மாவட்ட நீதிபதியிடம் அவர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கொடுக்குமாறு அவர்கட்கு ஆலோசனை கூறப்படும் என்றும் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அறிவித்துள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர், சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் புகழ்பெற்ற மாதேஸ்வரர் ஆலயத்திற்கு ஆண்டுதோறும் சிவராத்திரியின்போது செல்கின்றனர். இந்த ஆண்டிலும் இத் திருவிழாவை முன்னிட்டு சேலத்திற்கும், குளத்தூருக்குமிடையில் கூடுதல் பயணங்களை மேற்கொள்ள 73 பேருந்துகளுக்கு சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்கினர். இத் திருவிழாவை முன்னிட்டு குளத்தூரில் மோட்டார் வண்டி உதவி மேற்பார்வையாளர் ஒருவரும், மேட்டூரில் மோட்டார் வண்டி உதவி மேற்பாவையாளர் இருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்களைத்தவிர போக்குவரத்தினை முறைப்படுத்துவதற்காகவும் சரக்குப் பேருந்துகளில் பிரயாணிகளைக் கள்ளத்தனமாய் ஏற்றிச் செல்வதைத் தடுப்பதற்காகவும் மேட்டூரிலும், குளத்தூரிலும் காவல் துறை அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டனர். சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, போக்குவரத்து ஏற்பாடுகளை முறைப் படுத்துவதற்காக 26—2—1968, 27—2—1968 தேதிகளில் மேட்டூரிலேயே தங்கி இருந்தார். இக் கால அளவில் பயணிகளை ஏற்றிச் சென்ற 15 சரக்குப் பேருந்து வண்டிகள் இந்த அலுவலக நேரிடைப் பணியாளர்களிடம் பிடிப்பட்டண.

இத்தகைய முறைகேடுகள் கண்டுபிடிக்கப்படும்பொழுது, கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறும், சந்தைகளின்பொழுதும், திருவிழாக்களின்பொழுதும் சரக்குப் பேருந்துகள் அனுமதியின்றிப் பயணிகளையும் கள்ளத்தனமாக ஏற்றிச்

செல்கின்ற நிகழ்ச்சிகளை அறிவிக்குமாறும், வட்டாரப் போக்கு வரத்து அதிகாரிகளுக்குப் போக்குவரத்து ஆணையர் கட்டளை பிறப்பித்துள்ளார். கள்ளத்தனமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதை விழிப்புடன் கவனித்துக் கண்டு பிடிப்பதற்காக நேரிடைப் பணியாளர்களைப் போதிய எண்ணிக்கையில் நியமிக்கு மாறும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

சரக்குப் பேருந்து வண்டிகளின் உரிமையாளர்களும், பொது மக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, விதிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

(viii) வடார்க்காடு மாவட்ட பற்றுக்குறை வட்டங்களில் அரிசி விலை உயர்வு

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், சட்டப் பேரவை விதி களின் 41-வது விதியின்கீழ் அவசர பொதுமுக்கியம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"வடார்க்காடு மாவட்டம், குடியாத்தம், வேலூர், திருப் பத்தூர் ஆகிய மூன்று தாலுக்காக்கள் உணவுப் பற்றுக்குறை தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் அங்கு இதரத் தாலுக்காக்களிலிருந்து அரிசி கொண்டுவந்து விற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கட்டுப்பாடு இருப்பதாலும், போதுமான அளவுக்கு அரிசி கொடுக்காததாலும் அரிசி விலை உயர்ந்துள்ளது".

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: வடார்க்காடு மாவட்டத் தில் வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் வட்டங்கள் பற்றுக்குறை வட்டங்கள். எனினும், அங்கு வெளிச் சந்தையில் போதுமான அரிசி நியாய விலைக்குக் கிடைக்கிறது. தற்போது அறுவடை நடைபெறுததால் விலையில் சிறிது ஏற்றம் இருக்கிறது. ஆனல் சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்விலை ஏற்றம் குறைவாகவே இருக்கிறது. சென்ற ஆண்டு கிச்சிலி சம்பா புழுங்கல் அரிசி வேலூரில் ஒரு படி ரூ. 1-81 காசாகவும், பச்சரிசி ரூ. 1-87 காசாகவும் திருப்பத்தூரில் புழுங்கல் அரிசி ரூ. 1.90 காசாகவும், பச்சரிசி ரூ. 2.10 காசாகவும், குடியாத்தத்தில் புழுங்கல் அரிசி ரூ. 1-80 காசாகவும், பச்சரிசி ரூ. 1-88 காசாகவும், விற்றது. தற்போது வேலூரில் புழுங்கல் அரிசி படி ரூ. 1.50 காசாகவும், ப்ச்சரிசி ரூ. 1-80 காசாகவும், திருப்பத்தூரில் புழுங்கல் அரிசி ரூ. 1-75 காசாகவும், பச்சரிசி ரூ. 1-85 காசாகவும், குடியாத்தத்தில் புழுங்கல் அரிசி ரூ. 1.75 காசாகவும் பச்சரிசி ரூ. 1.87 காசாகவும் விற்கிறது.

இந்த விலை ஏற்றம் சாதாரணமாக வாணிபத் துறையில் ஏற்படக் கூடியதுதான். ஒரு வட்டத்திலிருந்து மற்ருெரு வட்டத் திற்கு அரிசி, நெல் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருப்பது தான் காரணம் என்று கூறுவது பொருத்தமற்றது. இவ்வட்டம்